உ

கடவுள் துணை.

இங்கிதகான சங்கீத சண்டமாருத இளஞ்சக்ரவர்த்தி


மாஸ்டர். M. M. சிதம்பரநாதன்,

மாஸ்டர். M. K. கோபிநாதன்

மாஸ்டர். M. S. ஷண்முகநாதன்,


இவர்கள் பாடிவரும்

# பழனிநாதன்

# பஜனைப்பாட்டு.




ஸ்ரீ மயில்வாகனன் அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பெற்றது.

காபி ரைட். 1929. விலை அணா 3

நெ. 2. சூளை ஹைரோட் மதராஸ்.

உ

கடவுள் துணை.

இங்கிதகான சங்கீத சண்டமாருத இளஞ்சக்ரவர்த்தி

மாஸ்டர். M. M. சிதம்பரநாதன்,

மாஸ்டர். M. K. கோபிநாதன்,

மாஸ்டர். M. S. ஷண்முகநாதன்

இவர்கள் பாடிவரும்

# பழனிநாதன்

# பஜனைப் பாட்டு.

---

## விநாயகர் துதி.

வெண்பா.

சீராருந் தென்பழனி சிங்கார வேல்முகன்மேல்
பாராருங் கீர்த்தனைகள் பாடிடவே—நேராரும்
விந்தமலர்த் தாளிணைகள் விகசிதமாய் விளங்கும்
கந்தமலர் சூடுங்கரி காப்பு.

---

உனதுபாதம் புயமலரது என்ற வர்ண மெட்டு.

இராகம் - சங்கராபரணம், தாளம் - ரூபகம்.

பழனி நாதன் பர ப்ரமாதன்
பால் தேன் பஞ்சாமிர்தப் (பழ)

## மகுடங்கள்.

பாதாம்புஜம் தரவருகிற
சதாகுஜைங் கரன்துணையுற (பழ)

பலிதமாகி உருவசைவ - கலியுகாதி வரததெய்வ (பழ)
பரமகுமர கருணையான - தமிழுக்குறிய கடவுளான (பழ)
பரிபாலன மனமோகன - கிருபாகர மயில்வாகன (பழ)
படிமேலமிர்தா மிர்ததுதி - யடியாரிரு தயாளயபதி (பழ)
பக்குவப்பானு திக்குசெம்புவியில்
கொக்கொரக்கோவென கூவிடுஞ்சேவல் (பழ)
பரைத்தமர் தவர்த்துதி - திருப்புகழ் ப்ரியப்பிரபு (பழ)
பாருங்கள் சித்துச்சங்க சேவடிநாடும்
கோருங்கள் சொக்கத்தங்க காவடிகூடும் (பழ)

## சரணம்.

பாலுக்கும் வேலிக்கோன் பாடிடும்கமழ்
பரவுவேங்க டேஸ்வரன் பிரசங்கம்
மாம்பழாசையான் பூசையான் (மாம்)
சாம்பிராஜ்யம் சன்மார்க்க வாக்யம்
மாம்பழாசையான் பூசையான் (மாம்)

---

## எக்காலந்தான் கடாக்ஷம் என்ற வர்ண மெட்டு.

இராகம் - தேசிகதோடி, தாளம் - ஆதி.

### பல்லவி.

சித்தானந்தா குகாமெய் திருச்செந்தூர் வாழும்புள்ளி
சிகண்டீச பாவந்தள்ளி சேர்ந்தாளே வேடவள்ளி(சி)

## அநுபல்லவி.

பர்த்தாகந்தா சுகாசை பதபாக்ய ஞானமந்திரா
விதபோகத் தியானதந்ரா வேதாந்த மேசுதந்ரா(சி)

## மகுடங்கள்.

பரமன் செவியில் பிரணவஞ் சொலும்(சித்)
பாரினில் சீரனும் சீரடி போற்றிடும்(சித்)
பகலிறவு மென் னிடம் வருகுவாய்
இகபர சுகந் தநி தருகுவாய் (சித்)
பாலிப்பாய் பாசுரமொழி
பாகன வுரை பாலகன் முறை
பார்மகிழ்வோடு தநி (சித்)

## தொகையரா.

கமழ்கடம் பாரனே புன்னாக நீழலுறை
கௌமாரி கனிஷ்ட பாலா
குமர வீர ப்ரதாபனே கொடுஞ்சூர
குலாந்தகா சஷ்டிவேலா.

## சரணம்.

குருமுனிதொழும் அறுமுகவனே
குருமணிவர மருள்பகவனே
குழந்தை வெங்கடேஸ்பரன் கிரிகிந்து
தலந்தலங்கிர்தஞ் சொலும் கிருதச்சந்து (சி)

---

இராகம் - தேசிகதோடி, தாளம் - ஆதி.

## பல்லவி.

சிக்கந்தமலைக் குகையி விருப்போனே முருகா
அக்கந்த மலைக்கண்ணன் விருப்பான மருகா(சி)

மகுடம்.

தெள்ளு மாமணி ரஸ்யா தீத
பள்ளி வாசலின் னிஸ்லாம் வேத (சி)

திகளு முகம நிக்தஸ்தான்
புகழு முடைய குண மஸ்தான் (சி)

தக்கன் தவமழித்திட பர
னுக்கந்த ரகசிய மெனு மோ
ழிக்கந்த மலை பொழி பிரப
லக்கந்தர மகிதல பெரு மை (சி)

தொகையரா.

மகாஜனக் கூட்டமே முதிர் கார்த்திகை தீபமாம்
மாங்கனு நற்பொய்கை
சகாகோடி சங்கமே அரோஹரா வென்றுதுதி
சாஷ்டாங்க ஞானச்செய்கை.

சரணம்.

சாலக்குற வஞ்சிமணு
லாலக்ஷண விஞ்சை குணு

சரவணபவ சடாக்ஷர கடாக்ஷனே எனையாண்டருள்
சாஸ்பதவெங்க டேஸ்வரன் துங்க (சி)

---

இராகம் - இந்துஸ்தான் தோடி தாளம் - ரூபகம்.

பல்லவி.

ஷண்முகா யேழை என்மேல் தயவில்லையா
தாமதமேனோ சரிதானோ பதில் நீசொல்லையா (ஷ)

மகுடம்.

தக்கன் தவமழித்திடு முக்கண் சிவகுமரனே (த)
சதமென உனதிரு பதமல ரிதுதுதி நம்பினேன் (த)
சரவண பவகுக குருபரா திருமகள் மருகனே (த)
சத்திக் கரவேல்பிடித் தசுரரை
தத்தித் தரைமேல்மடித்திடு ஜெயமுருகனே (த)
சதுர்முகவ னெதிரில் தர்க்கித்தே தகுந்தவிதம்
உக்ரத்தோ டிகழ்ந்துசிறை புக்கத்தான் புகன்றவனே (த)

அநுபல்லவி.

பெண்மகா மோகத்திலே
பித்தப்பட்டுச் சித்தம்கெட்டு பெருத்த உற்சாகத்திலே
பேதகத்தை யேவகுத்த பாதகத்தை நீபொருத்திடாய்
பெருமித முத்தமிழ் நிருபண வித்துவ பாஸ்கரனின்

சரணம்.

பண்புகா தேகத்திலே
பக்திக் கிதஞ்செய முந்தப்பா கலியுக வரதனே
அத்திக் குறமகள் சுந்தப்பா அனவரதமும்சொல
முக்திப் பதமருள் கந்தப்பா முறையிடு என திடம் (த)

---

செந்தமிழுலகினில் தந்திட்ட என்ற வர்ண மெட்டு.

இராகம் - தேசிகதோடி, தாளம் - தா நி.

கண்ணிகள்.

கடம்ப கந்தன் சேவை மகத்துவம்
கண்டேன் மெய்க் கலியுக வரதன்

கல்யாணத் திருப்பரங்குன்றம் சற்குருமணிமுருகன்
கல்யாணத் திருப்பரங்குன்றம் ஜீவ

காருண்யக் கடவு ளாரண்யக் குறவர்
நேர்புண்யக் கிழவர் போல்நடித்துளறி

கைகால்மெய் நடுக்குடன் நின்றான் தினைமாதரும் வள்ளி
காட்டானை பயத்தில் மணங்கொண்டான் (கடம்)

டடட்டடண்டென பபப்பபம்பென
சங்கோசை சேகண்டிவாத்தியம்
தண்டாயுதப் பண்டாரமே கங்காள சித்தர்
சற்ஜானந்தத்தின் சாரமே பஞ்

சாக்ஷாத் தகமை மோக்ஷவீக்ஷ
சடாக்ஷரப் பெருமை காக்ஷிகாணருமை

தன்பாதம் பரப்பதந் தந்தான் மெஞ்ஞானரத்னம்
தன்பாடல் திருப்புகழ் சிந்தாம் (கடம்ப)

அலகிர்த ஜம்பம் காவடி இன்பம்
அமூர்தப்ர வாகம் பொங்கி
அழியாதப் பேரின்பமே தொண்டூழியர்க்கு
திடங்காட்சி யாரம்பமே வெண்

திருநீரமிர்தம் தருங்குகன் சுகிர்தம்
திருமங்கலமா மயின்மிசை நடமிடும்

ஆச்சாரப் பூஜை வித்வமே பகதூர் மாம்பழம்
வேல்ச்சாமி பாஷ்ய ரத்னமே (கடம்ப)

அடங்கிலும் ஜெகஜோதி மினுங்க என்ற வர்ண மெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி, தாளம் - ஆதி.

பல்லவி.

துலங்குசெம்பொன் கோபுரமேவிய த்வாதா சங்கமதுரை
சொக்கலிங்கக்கடவுளே மீனாட்சிபாகா (சொ)

அநுபல்லவி.

தொண்டரு மண்டரும் வந்து துதித்திடும் (த்வா)
துறக்கவும் பிறக்கவு மிறக்கவுங் கதிதரும் (த்வா)
ஜோதியுற்ற வீதிசுற்ற ஓதிமற்ற நீதிகற்ற (த்வா)

சரணம்.

அலங்காரத் து டனே கூத்தாடி
அடியார்க் கருள் செய்வாய் நாடி
நலங்காணப் பெற வே முன்னாடி
நம்பும் பாஸ்கர னின்பதம் பாடி

நாளும் கும்பிட்டேன் கொண்டாடி நன்மைபெறவே
நாளும் கும்பிட்டேன் கொண்டாடி.

---

இராகம் - நாட்டைக்குறிஞ்சி, தாளம் - ஆதி.

பல்லவி.

ஏழைமே லின்னும் வர்மமா சாமி (ஏழை)
ஈதருமையாய் கோரினேன் (ஏழை)

அநுபல்லவி.

ஆழமாங் கடல் சூழும் பூமியில்
ஆசை நீக்கிவுன் அருள்பெற அறியேன் (ஏ)

சரணம்.

நீ நினைக்க முழு ஞானி யாவன் வெகு
நேரமல்ல ஒரு பாயமல்ல
நானுனைவிட மாட்டேன் சாமியே
ஐயா னுனய்யா யென்னையா யித்தருணம் (ஏ)

சோதனை தரும மோ தகுமோ ஒரு
திரும்பு நானினிச் சொல்வ தென்ன
சாதனமெனுஞ் சதுட்டய நயசந்
தான கிருஷ்ணத்தி யான காரணனே (ஏ)

---

கோலா கலக்குமரா என்ற வர்ணமெட்டு.

இராகம் - தேசிகதோடி, தாளம் - ஆதி.

பல்லவி.

வேலாயுதக் குமரா வேலாயுதா

அநுபல்லவி.

சீலா வள்ளி மகிழும் லோலா ஜெகம் புகழும்
சேவை தந்திட வேணுமுந்தனை
யேவணங்கினேன் பூவடி தந்தருள்(வே)

தொகையரா.

தேவாதி தேவனே திருச்செந்தூர் வாசனே
திருப்பரங் குன்றானே
தேனார்கடம்பனே திருக்கார்த்தி கேயனே
தேசிகா மயில் வீரனே

பாட்டு.

பழனிச் சாமிக்குருவே பாலன் சந்தத்தருவே
பாடித் தொழுதேன் பக்த னெனக்கினி
நாடித் தருவாய் நற்கதி யித்ததி(வே)

த்வாத சாந்த மதுவைபோக சோதி மீனாக்ஷிபாக
என்ற வர்ண மெட்டு.

குமரனே உன் அருமை பேச
கோலாகல விஸ்வாசா (கு)

அநுபல்லவி.

சமர ஞான தருகு மோன
தமிழ் மணங்கமழ்ந் திலங்கும் ஞான (கு)

தொகையரா.

குருபரா யெனவரும் அருமுகா சரவண
குளிர்தெய்வ யானைமகிபா
அரகரா யெனவரும் மறைமுகா திருமார்பா
அகிலம் புகழ் சண்முகா.

பாட்டு.

அன்பர் கொண்டாடும்பாதா ஆடுமயில் விநோதா
ஆவினன்குடி மீதுகாவடி சேவலம்புகழ் யாங்குணங்குடி(கு)

தொகையரா.

எக்காலம் வந்தெனை ரட்சித்தருள் வையோ
ஐங்கரன் தம்பிரானே
அய்யனே மெய்யனே துய்யனே வந்தருள்
இனிய சுப்ரமண்யனே.

## பாட்டு.

கொஞ்சுந்தமிழ் மதுரகவி கொண்டாடும் பாண்டிப்பூமி
கோரும்பக்கிரி சாமிசெந்தமி ழேதிருப்பரங் கோவிலற்புத()

---

பழனி மலைக்குநாம் நேராய் என்ற வர்ண மெட்டு.

இராகம் - பைரவி, தாளம் - ரூபகம்.

### பல்லவி.

கழுகுமலைக்கு நாம் நேராய் கந்தனை
சரணப்போவோம் எல்லாம் வாருங்கள் சீராய் (கழு)

### அநுபல்லவி.

கனிந்து கடம்பன்வாழ்நிலை இடந் தெரிந்ததோ நேராய் (க)
துஷ்டர்களின் குற்றமொடு விட்டகுறை வெட்டவெளி (க)
முனைந்து விறைவாய் செல்வோம் தினந்தினந் தனிலுநாமே
விருப்புடன் மகிழ்ந்து புகழ்ந்து திருப்புகழ் சந்தம்
இலங்கும் துலங்கும் (க)

### சரணம்.

எட்டு திசை புகழ் பெற்றிடுங் கண்ணியன்
இஷ்டமானவர்க்கே ரூபலா வண்ணியன்
எட்டியாபுரம் வாழ் குவரே காருண்யன்
எட்டி ( வங்கடேசன் வணங்கும் சுப்ரமண்யன்

காலடி வணங்கிடும் நேமி கவி எம். ஆர். கோவிந்தசாமி
தாளடி யவர்தொழும் பூமி தாவியே தொழுங் கந்தசாமி()

---

(தேசாபிமானிகள் கீதங்கள்)

**பல்லவி.**

கதர் கப்பல் கொடி தோணுதே
கரன் சந்த்ர மோகனதாஸ் காந்தி இந்தியா சுதேச(க)

**அநுபல்லவி.**

ஆதியிலே ஞானவாசம்
ஆகிய பாரத தேசம்
இதற்குள் ஜீவப்ரகாசம்
இனி நமக்கே சந்தோஷம்

**சரணம்.**

மானிட சிப்பிக்குள்ளே மஹாத்மா ஒரு முத்துப்போலே
ஞான விரதங்கொண்டு நமைக்காக்க வந்ததாலே
லௌகீகம் விட்டால்
வைதீகம் நாம்
நன்றாய்க் கொள்வோம் நாகரீகம் (கதர்)

விக்டோரியா ராணியம்மா விடைதந்த நியாயம் சும்மா
உத்யோக வக்கீலெல்லாம் ஊமையோ பேசார்களம்மா
உதவாதே சட்சி
மிதவாதே என்றும்
ஒத்துழைத்த லத்யாவசியம் (கதர்)

---

எந்தன் சிங்காரக்கோகிலம் என்ற வர்ண மெட்டு.

இராகம் - இந்துஸ்தான் தோடி, தாளம் - ஆதி.

பல்லவி.

பாரினிலே புகழ் பாரத புத்திரரே தேச
பக்த மித்திரரே (பா)

அநுபல்லவி.

ஊரினிலே பஞ்சம் ஓங்குவதைப்பாரு
ஒன்றுபட்டு நேரில் நின்று தொட்டு வாரீர் (பா)

தொகையரா.

வஸ்திரத்தில் பலகோடி மதுவகையில் பலகோடி
வருடந் தோறும் நாம்
கிஸ்தியைப்போல் செலுத்துகிறோம் கேவலமே
கீழ்நா டென்றே நாம்
எத்தனைநாள் படுத்திருப்போம் இனியேனும்
நித்திரைவிட் டெழவேண்டாமோ.

பாட்டு.

கத்தருடுத்திடில் வெற்றிசுதந்திரமே
எதிர்காணும் மந்திரமே
ஒ த்தமிழ் பாஸ்கர வித்வ முற்றுமே
முட்டை தூக்கிடாமல் ராட்டை சுற்றுவோமே (பா)

---

கரம்சந்த்ர மோகனதாஸ் என்ற வர்ண மெட்டு.

இராகம் - இந்துஸ்தான் பியாக், தாளம் - ஆதி.

சுயராஜ்யம் அதிக தூரமில்லை தெரிவீர்
துணிந்து மதுவிலக்க துணைபுரிவீர் (சுய)

அநுபல்லவி.

தூயரான இந்துதேச ஸோதர ஸோதரிகாள்
தூய மகாத்மாகாந்தி சொல்லை யறிவீர் (சுய)

தொகையரா.

பஞ்சமா பாதக மைந்து மூன்றில்
பலகலை யுணர்ச்சிசெய்த பாழான குடியே
பகர் மத்தியானவேளை பசுற்கூதாடும் குடியே

பாட்டு.

தேசத்திற் கேவுழைக்க தேகமெடுத்த காந்தி
நேசத்துட னுரைத்தார் ராட்டை கையேந்தி (சுய)

தொகையரா.

பாஸத்துடன் நூல்நூற்று பஞ்சுகை தரிகிவிட்டு
நாம் தரிப்போம் நூலால் பலவகைத் திணுசுபட்டு

பாட்டு.

புவனமதி லிலகும் பூமான் மகாத்மாகாந்தி
போதிக்கும் புத்திகளை உணர்ந்திடுவீர்
முன்னோர் பெயரைக்கெடுத்த மூடகுடியை விட்டு
முன்னேர பாஸ்கரான்சொல். முழங்கிடுவீர் (சு)

---

காக்ஷி கண்காக்ஷியே என்ற வர்ண மெட்டில் சந்தம்.

பல்லவி.

பஞ்சாப் படுகொலை
பாரிர்க் கொடியது பழிபவ முடையது (பஞ்)

## மகுடங்கள்.

அஞ்சாப் பெருவம்பென அறநிலைதப்பிய சிறியவன்வேலை
படைக்களத்தினு லுடைக்கலாமென
மடக்கருத்துட னிடக்கலாமிரு (ப)

தாயும் தந்தையும் சேயினிழந்ததாய்
போய் கரைதனி லேயு முன்னிட (ப)

ரத்த ஆறு பெருக்கருத்திட
சித்தவை கொத்திமை கொள்ளும் (ப)

இந்தியர்கள் வருந்தி அலைந்திட
நொந்து கலங்கிட அந்தோ செய்தது (ப)

சற்புக்கரசிகள் பொற் பழிந்திட
கற்பழித்தது செப்பத்துயருறும் (ப)

கண்ணீர் விட்டுக் கதறித் கதறித்
தண்ணீர் கேட்டு சாய்ந்து மடிந்தனர் (ப)

இழுத்து கை நகங்களிலே ஊசி
அழுத்திதள்ளிட அரைந்து அரைந்த (ப)

படுக்கச்சொல்லி கைமணி
கட்டுகளை ஒடிக்கக் கட்டிவர பிடித்து (ப)

நம்நாட்டு நேசர் தோட்டந்தனிலே
வாட்டியே கொள்ளும் சேட்டையான (ப)

இந்தியரே யிந்த படுகொலை நின்றிட
மந்திரமே செய்து சுகங்களையே பெற்றிடும் (ப)

## ஆதிகடவுளர்க்கு என்ற வர்ண மெட்டு.

### கண்ணிகள்.

பாரத மாதாபெற்ற பாலர்களே நமக்கு
பாரில்சுய ராஜ்யம்பெற பாடுபட்டார் மஹாத்மா
பரதவிக்கும்படி விட்டார் பரமனு மிப்படி (பா)

சாதனமாக வாழ்க சர்க்காரிடமே கேட்டார்
நூதன மானசட்டம் நூற்றி யிருபத்திநாலாம்
நொடிக்குள்ளே அரஸ்டாம் எங்கும் பிடிப்பது துருஷ்டாம்

துன்மதி மார்ச்சுமாதம் தொடர்ச்சி யிருபத்துயேழில்
தூய்ய ஆமதாபாத்தில் தூயருரவே காந்திதனை
துரிதமாய் பிடித்தார் ஆறு வருடமென் றுரைத்தார் (பா)

சௌஹதலி மஹமதலி சமர்த்தாய் சிறைபுகுந்தார்
சஞ்சலங்கள் அனைவோர்க்கும் நெஞ்சமதிலேயில்லாமல்
சாற்றியே மொழிந்தார் தவச் சாலையில் புகுந்தார் (பா)

## ஷடி மெட்டு.

கைத்தொழிலும் வர்த்தகமும் கவர்ந்துசென்ற ஜெர்மனியர்
காசுமிஞ்சி கெர்வங் கொண்டு ராஜநீதி கருதாமல்

கண்டபடி கபடமுடன் சண்டையிட்டார்
கைமெலிந்து சரணமென மண்டியிட்டார் (கை)

உள்நாட்டு குழப்பமொன்று உண்டங்கு ருஷியாவில்
கண்ணுன பூமிகளை கைகொண்டார் ரோமனியர்

சால அவமதித்தார் பிரிட்டிஷாரை
கோல மொழிதொடுத்தன் னுட்டுதுரை (கை)

இத்தனையும் பெறுநெருப்புக் கீரமில்லை யென்பதுபோல்
ஏராள நேசர்படை ஆங்கில துரைத்தனத்தால்

இழந்துபோன பெல்ஜியத்தை மீட்டுவைத்தார்
இன்பமன்னருக்கு முடி சூட்டிவைத்தார் (கை)

ஆனமண் குதிரைநம்பி ஆற்றிலிரங்கினார்போல்
அரக்கர் ஜெர்மனியரும் ஆஸ்டியரும் சரணடைந்து

அண்டினார் நம்மரச ரண்புவைத்தார்
அன்றொரு சமாதானக் கூட்டம் வைத்தார் (கை)

அருமைசுய நிர்ணயத்தை அனைவருக்கும் ஆளுதற்கு
கருணைதுரை யானவில்ஸன் காட்டியமேன் பாட்டுவாழி

கண்ணான வழியதனை கடைப்பிடித்தார்
மண்ணாளு பூமியிலே அறம்தொடுத்தார் (கை)

பத்தொன்பதாம் நூற்றுக்குமேல் 19-ம் வருஷத்திலே
இட்டதொரு ஜூன்மாதம் இருபத்தெட்டாம் தேதியிலே

கிட்டுபட்டார் ஜெர்மனியர் கையெழுத்தில்
விட்டுவிட்டார் சண்டையிந்த வையகத்தில் (கொ)

ஞானப் பொருளும்வாழி நமதுசிங்கக் கொடிவாழி
நம்பும் நமதுநாட்டு யிந்தியர் மென்மேல் வாழி

அமெரிக்கா சம்பன்னரும் வாழி
ஆரிய கான சபாவாழி (கை)

முற்றிற்று.

---

ஸ்ரீ மயில்வாகனன் பிரஸ், நெ. 2 சூளை மதராஸ்.